DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 261/2021

Petitioner Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆயிமுத்து | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கந்தசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 07/04/2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் காசோலை கொடுத்து ஏமாற்றிய வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மணிமாறன் யார் என்றால் எனது மருமகன். அவர் எங்கு குடியிருக்கிறார் என்றால் துபாயில் வேலை செய்கிறார். எதிரியை தெரியுமா என்றால் தெரியும், திலகவதி. அவரை எப்படி தெரியும் என்றால் எனது மருமகன் மூலமாக தெரியும். அவர் எதிரியை எப்போது எங்கு வைத்து அறிமுகம் செய்தார் என்றால் 2018-ல் வடபழனி முருகன் கோவில் அருகில் உள்ள உணவகத்தில் அறிமுகம் செய்தார். அந்த உணவகத்தின் பெயர் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சொல்வதுபோல் உணவகத்தில் வைத்து பணம் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் தான் எனக்கு உணவகத்தின் பெயர் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன்.

2) எதிரிக்கும், எனது மருமகனுக்கும் இடையே சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மருமகன் சட்டவிரோதமாக ஆதாயம் அடையும் எண்ணத்தோடு எதிரியிடமிருந்து காவல் துறை அதிகாரிகள் உதவியுடன் வலுக்கட்டாயமாக பெற்று இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு, எனது மருமகன் மற்றும் எதிரி ஆகியோருக்கு இடையே நடைபெறும் வழக்கு பற்றி தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு நான் எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 2021 ஆம் வருடம் 7 வது மாதம் தாக்கல் செய்தேன். வழக்கு காசோலையை யார் நிரப்பி கொடுத்தது என்றால் என்னுடைய மகன் நிரப்பி கொடுத்தார். அவர் பெயர் என்ன என்றால் ஞானமூர்த்தி. வழக்கு காசோலையை எனது மகன் தான் நிரப்பினார் என்று சட்ட

அறிவிப்பிலோ, எனது புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) வழக்கு காசோலையை எதிரி கொடுத்தபோது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும், எனது மகனும், எதிரியும், அவரது கணவரும் இருந்தோம். வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எனது மருமகனை விசாரித்தால் தான் வழக்கு காசோலை பற்றி உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. அவரை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை எந்த மொழியில் நிரப்பினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் பார்க்கவில்லை. எனது மருமகன் துபாயில் என்ன வேலை செய்கிறார் என்றால் கார் வாடகைக்கு விடும் நிறுவனத்தில் வேலை செய்கிறார்.

(எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN Digitally signed by S KABALEESWARAN Date: 2025.04.07 17:39:20 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 07/04/2025